ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1832/27 - 2013 ඔක්තෝබර් මස 17 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.10.17

*1832/27 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*ச. அ. இல.: சிஎஸ்ஏ/1/16/1.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 45(1) ஆம் உறுப்புரையின் கீழ், அமைச்சர்களின் நியமனம் தொடர்பான 2013, சனவரி மாதம் 31 ஆந் திகதியும் 1795/43 ஆம் இலக்கமும் கொண்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2013 இன் 22/2 ஆம் இலக்க அறிவித்தலானது 2013, ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு திருத்தப்படுகிறதென்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.*

| | பெயர் | விடயம் |
|---|---|---|
| 1. | மாண்புமிகு ரோஹித்த பியதிஸ்ஸ அபேகுணவர்தன, பா. உ. அவர்கள் | நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை |
| 2. | மாண்புமிகு நிர்மல கொத்தலாவல, பா. உ. அவர்கள் | நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை |

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*லலித் வீரதுங்க,*
*சனாதிபதியின் செயலாளர்.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு 01,*
*2013, ஒற்றோபர் 15.*

*11-148/1*

---

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு

*அறிவித்தல்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (1) (அ) பந்தியின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, என்னால் 2010, நவெம்பர் மாதம் 22 ஆந் திகதிய 1681/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதையடுத்து காலத்துக்குக் காலம் திருத்தப்பட்ட அறிவித்தலானது, 2013, ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேலும் திருத்தப்படுகிறது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு 01,*
*2013, ஒற்றோபர் 15.*

**அட்டவணை**

(1) அவ்வறிவித்தலிலுள்ள துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சர் (இல. 3) எனும் தலைப்பை பின்வருமாறு திருத்துவதன் மூலம்:-

(அ) அந்த தலைப்பை "(3) நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சராக ";

(2) அவ்வறிவித்தலிலுள்ள கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சர் (இல. 47) எனும் தலைப்பு தொடர்பாக பின்வருமாறு:-

(அ) அதன் III ஆம் நிரலில் காட்டப்படுகின்ற "நெல் சந்தைப்படுத்தல் சபைச் சட்டம்" எனும் விடயத்தின் கீழ் பின்வரும் விடயத்தை சேர்ப்பதன் மூலம:-

" இலங்கைச் சந்தைப்படுத்தல் நிறுவக (கூட்டிணைத்தல்) சட்டம். (1980 இல. 41) ";

(3) அவ்வறிவித்தலிலுள்ள தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சர் (இல. 61) எனும் தலைப்பு தொடர்பாக பின்வருமாறு:-

(அ) அதன் III ஆம் நிரலில் காட்டப்படுகின்ற "தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சட்டம் (2003 இல.27)" எனும் விடயத்தின் கீழ் பின்வரும் விடயத்தை சேர்ப்பதன் மூலம:-

" இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம். (2006 இல. 19) ";

*11-148/2*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.